# 6

# இறைக்கொள்கையும் அரச நிதியும்

அரசிறைத் திரட்டல் மற்றும் செலவினச் சிக்கனங்களுக்கான அரசின் திட்டங்களை கடுமையாக பாதித்த கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் இறைத் தொழிற்பாடுகள் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்கியிருந்தன. 2020ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டமொன்று இல்லாத நிலையில் அரசாங்கம் கணக்கு வாக்கெடுப்பின் கீழும் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின் கீழான அதிமேதகு சனாதிபதியின் சட்டபூர்வமான அதிகாரவளிப்புடனுடனும் அரசாங்கமானது இறைத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை முன்னெடுத்திருந்தது. இதன்படி, 2019 நவெம்பரில் சனாதிபதி தேர்தல் நடைபெற்றமையினைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டிற்கான அரசின் தேசிய வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு போதுமானளவான நேரம் காணப்படாமையின் காரணமாக 2019இன் ஒத்தோபர் மாதத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட கணக்கு வாக்கெடுப்பின் கீழ் 2020 சனவரி தொடக்கம் ஏப்பிரல் வரையான காலப்பகுதிக்கான இறைத் தொழிற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்தன. வருடாந்த வரவுசெலவுத்திட்டம் அல்லது கணக்கு வாக்கெடுப்பினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் 2020 மார்ச் 03ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கருத்திற்கொண்டு பொதுத் தேர்தல் தாமதமடைந்தமை என்பவற்றின் காரணமாக மேதகு சனாதிபதியின் அதிகாரமளிப்பின் கீழ் திரண்ட நிதியிலிருந்து பொதுச்சேவைகளுக்கான செலவினமானது வசதிப்படுத்தப்பட்டிருந்தது. 2020 ஓகத்தில் இடம்பெற்ற பொதுத்தேர்தலைத் தொடர்ந்து 2020இன் இறுதி நான்கு மாதங்களுக்கான மற்றுமொரு கணக்கு வாக்கெடுப்பிற்கு பாராளுமன்றம் 2020 ஓகத்து 28ஆம் திகதி ஒப்புதலளித்திருந்தது. பொருளாதார நடவடிக்கைகள் மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் அரச அரசிறை, முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியினை காட்டிலும் மிதமான தன்மையைக் கொண்டிருந்தது. செலவினப் பக்கத்தில், மீண்டெழும் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்தமைக்கு சம்பளங்கள் மற்றும் கூலிகள், மானியங்கள் மற்றும் மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்த வேளையில் மூலதனச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சுருக்கமடைந்தமைக்கு அரசிறை மிதமடைந்தமை 2019இலிருந்து செலவுப்பட்டியல்கள் பெருமளவிற்குச் செலுத்தப்படாமையின் காரணமாக கசிந்த தாக்கங்கள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னணியில் புதிய மூலதனச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கங்கள் இல்லாமை என்பனவற்றின் காரணமாக வசதி இடைவெளி வரையறுக்கப்பட்டளவில் காணப்பட்டமையே காரணமாகும். மூலதனச் செலவினத்தில் ஏற்பட்ட இச்சுருக்கம் மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வினை விஞ்சிக் காணப்பட்டதன் காரணமாக 2020 யூலையுடன் முடிவடைந்த முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொத்தச் செலவினத்திலும் தேறிய கடன்வழங்கலிலும் 2019இன் இதே காலப்பகுதியினை விட வீழ்ச்சியொன்றைத் தோற்றுவித்தது. இருப்பினும் கூட, 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் அரசிறையின் மிதமான தன்மை, அரச செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை விஞ்சி முக்கிய இறை நிலுவைகளான வரவு செலவுத்திட்ட நிலுவை, ஆரம்ப நிலுவை, நடைமுறைக் கணக்கு நிலுவை ஆகிய முக்கிய நிலுவைகள் 2019இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பலயீனமுறச் செய்தன. 2019ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்படாத வெளிநின்ற உண்டியல்களின் தீர்ப்பனவுகள் இறைத் தொழிற்பாடுகளின் மீது மேலதிக அழுத்தத்தைத் தோற்றுவித்து 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை விரிவடைவதற்குப் பங்களித்தது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதில் தேறிய கடன்பாட்டில் ஏற்பட்ட உயர்வு ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையின் தாக்கத்துடன் சேர்ந்து 2019இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2020 யூலை இறுதியில் வெளிநின்ற மத்திய அரச படுகடனில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் நிதியிடுவதற்கு அரசாங்கம் உள்நாட்டு மூலவளங்களில் தங்கியிருந்த வேளையில் 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு நிதியிடல் தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்தது. அரசாங்கம் 2020 ஒத்தோபர் ஆரம்பத்தில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உட்பட 2020இல் இதுவரையான படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் அனைத்தையும் சரியான முறையில் தீர்ப்பனவு செய்து 2020இல் முக்கிய பன்னாட்டு தரமிடல் முகவர்களினால் இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையின் காரணமாக எழுந்த மோசமான ஊகங்களையும் நிச்சயமற்ற தன்மைகளையும் நிராகரித்திருக்கிறது. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் முக்கிய இறை நிலுவைகள் பொருளாதார நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட மீளெழுச்சியுடன் சேர்ந்து 2021 இலிருந்து மேம்படுவதற்கு முன்னதாக 2020இல் பலவீனமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## .இறைக் கொள்கை வழிமுறைகள்

- **2020இல் இறைக் கொள்கை வழிமுறைகள் ஒருபுறம் அரசியல் அபிவிருத்திகளின் செல்வாக்கிற்கும் மறுபுறம் கொவிட்-19 பரவலின் செல்வாக்கிற்கும் உட்பட்டிருந்தன.** 2019 நவெம்பரில் சனாதிபதி தேர்தல் நடைபெற்றமையின் காரணமாக 2020ஆம் ஆண்டிற்கான அரசின் தேசிய வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு போதுமானளவான நேரம் காணப்படாமையின் காரணமாக 2019இன் ஒத்தோபர் மாதத்தில் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட கணக்கு வாக்கெடுப்பின் கீழ் 2020 சனவரி தொடக்கம் ஏப்பிறல் வரையான காலப்பகுதிக்கான இறைத் தொழிற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்தன. அதேவேளை, வருடாந்த வரவுசெலவுத்திட்டம் அல்லது கணக்கு வாக்கெடுப்பினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் 2020 மார்ச் 03ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கருத்திற்கொண்டு பொதுத்தேர்தல் தாமதமடைந்திருந்தது. ஆகையால், 2020 மார்ச் 06 இலிருந்து 2020 ஓகத்து 31 வரையான காலப்பகுதியில் மேதகு சனாதிபதியின் அதிகாரமளிப்பின் கீழ் திரண்ட நிதியிலிருந்து பொதுச்சேவைகளுக்கான செலவினமானது வசதிப்படுத்தப்பட்டிருந்தது. 2020 ஓகத்தில் இடம்பெற்ற பொதுத்தேர்தலைத் தொடர்ந்து 2020இன் இறுதி நான்கு மாதங்களுக்கான மற்றுமொரு கணக்கு வாக்கெடுப்பிற்கு பாராளுமன்றம் 2020 ஓகத்து 28ஆம் திகதி ஒப்புதலளித்திருந்தது. எனினும், 2020 நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டு மசோதாவானது 2020 ஒத்தோபர் 06ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.[1]

- **2019இன் பிற்பகுதியில் சனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்ட இறைத் தூண்டல் வழிமுறைகள் பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட மீளெழுச்சியை அடைந்து கொள்வதில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் சவாலுக்குட்பட்டது.** அரசிறையின் மீது அத்தகைய வழிமுறைகளின் அண்மைக்கால எதிர்க்கணியமான தாக்கம் கொவிட்-19 முடக்கநிலையின் விளைவாக பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுருக்கத்தினால் மோசமடைந்திருந்தது. இதன்படி, 2020இல் அரசிறையானது மொ.உ.உற்பத்தி நியதிகளில் வரலாற்றிலேயே மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்பார்க்கப்படுகின்ற அரசிறையின் நழுவல்களுடன் இணைந்தான மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வு முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட வெளிநின்ற கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகள் என்பவற்றுடன் சேர்ந்து 2020இல் இறைச் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க மோசமான தன்மையொன்றினை ஏற்படுத்தும் போல் தோன்றுகின்றது.

- **கொவிட்-19 தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு ஆதரவினை வழங்கும் நோக்குடன் பரந்த வீச்சிலான இறை வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன.** 2020 பெப்புரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கென தெரிவுசெய்யப்பட்ட சுகாதாரத் துறையுடன் தொடர்பான சாதனங்களின் இறக்குமதியானது துறைமுகம் மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை, பண்டங்கள் ஏற்றுமதியின் மானியத் திட்டத்துடனான (செஸ் வரி) பிடித்து வைத்தல் வரி செலுத்துகை காலத்தின் கொடுப்பனவுகள் மற்றும் பெறுமதிச் சேர் வரி என்பவற்றிலிருந்து விலக்கப்பட்டமையானது 2020 ஏப்பிரல் 30 வரைக்கும் விரிவாக்கப்பட்ட அதேவேளையில் முடக்கல் காலப்பகுதியில் அனைத்து வரிகளுக்குமான தண்டக் கொடுப்பனவுகளின் விலக்கல்கள் தொடர்பில் பணிப்புரைகள் விடுக்கப்பட்டதுடன் பிந்திய கொடுப்பனவுகளுக்கான தண்ட ஏற்பாடுகள் 2020 யூலையிலிருந்து ஆரம்பமாகின. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு 2018/2019 மதிப்பீட்டு ஆண்டு வரை வழங்கப்பட்ட வரி மதிப்பீட்டின் மீதான வருமான வரி நிலுவைகளின் தள்ளுபடி வடிவிலான பல்வேறுபட்ட வரி நிவாரண வழிமுறைகள், 2019/2020ஆம் ஆண்டிற்கான மேலதிக மதிப்பீடுகள் வழங்கப்படாமை, நிலுவையிலுள்ள/தவணை தவறிய வரிகளை செலுத்துவதற்கு சலுகைக் காலம் வழங்கப்பட்டமை, பறிமுதல் செய்வதற்கான அறிவித்தல்கள் நீடிக்கப்பட்டமை, மற்றும் வரி செலுத்துவதற்கும் வரிக் கூற்றுக்களைப் பூர்த்தி செய்வதற்குமான கால அவகாசம் நீடிக்கப்பட்டமை என்பனவற்றின் மூலம் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு தற்காலிக காசுப்பாய்ச்சல் நிவாரணம் வழங்கப்பட்டது.

1 அரசியல் அமைப்பின் உறுப்புரை 150(2) மற்றும் 150(3) இன் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் கீழ் செய்யப்பட்ட குறிப்பிட்ட செலவினங்கள் மற்றும் முற்பணங்கள் 2020ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 1ஆவது அட்டவணை, 2ஆவது அட்டவணை மற்றும் 3ஆவது அட்டவணையில் உள்ளடக்கப்படவுள்ள வேளையில் உறுப்புரை 150(2)இன் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நியதிகளில் செய்யப்பட்டுள்ள கடன்பாடுகள் 2020 ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 2(1)ஆ இன் கீழ் உள்ளடக்கப்படும். 2021ஆம் நிதியியல் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமும் 2020 ஒத்தோபர் 06ஆம் நாளன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

வரைபடம் 6.1

இறைத்துறையின் செயலாற்றம்




(மத்திய வங்கியின் எறிவுகள்)

- **2020ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட வரிச் சலுகைகள் தொடர்பில் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தங்கள் இடம்பெற்று வருகின்றன.** 2019இன் இறுதியில் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டவாறு பாராளுமன்றத்தின்[2] ஒப்புதலுக்கு உட்பட்டு 2020 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அவ்வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டன. முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தற்போதுள்ள வருமான வரி அமைப்பினை எளிமைப்படுத்துவதனையும் பொருளாதார நடவடிக்கையின் மீளெழுச்சிக்கு ஆதரவளிக்கும் விதத்தில் வரிச் சலுகைகளை வழங்குவதனையும் முக்கிய நோக்காகக் கொண்டிருந்தன. இதன்படி, திருத்தங்கள் தனியாள் வருமான வரிகள், வரியற்ற கீழ்மட்டம் மற்றும் வரிப் பிரிவுகள் என்பனவற்றிற்கு அறிமுகப்படுத்தப்பட்டன. எந்தவொரு தொழிலிலிருந்தான வருமானத்திற்குமான வருடாந்த வரியற்ற கீழ்மட்டமானது ஆண்டொன்றிற்கு ரூ.1.2 மில்லியனிலிருந்து ரூ.3.0 மில்லியனுக்கும் தனியாள் வருமானத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.500,000இற்கும் அதிகரிக்கப்பட்டது. வரியற்ற கீழ் மட்டத்திற்கு மேல் வரி செலுத்துவதற்கான ஏற்புடைத்தான வருமான வரிப் பிரிவுகள் ஆண்டொன்றிற்கு ரூ.600,000இலிருந்து ரூ.3.0 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டன. தனியாள் வருமான வரி வீதங்கள் எளிமைப்படுத்தப்பட்டதுடன் முன்னைய அமைப்பான 4 சதவீதம், 8 சதவீதம், 12 சதவீதம், 16 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 24 சதவீதம் கொண்ட அமைப்புடன் ஒப்பிடுகையில் 6 சதவீதம், 12 சதவீதம், 18 சதவீதங்களுக்குத் திருத்தப்பட்டது. மேலும், எவரேனும் வதியும் அல்லது வதியாதவர்களுக்கான தொழில் வருமானத்தின் மீதான உழைக்கும் போதே செலுத்தும் வரியானது 2020 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நீக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உழைக்கும் போதே செலுத்தும் வரிக்குப் பதிலாக உயர்ந்த தனியாள் வருமான வரி 2020 ஏப்பிரல் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் விருப்பத்தேர்வு அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது. உயர் தனியாள் வருமான வரி வதியும் ஊழியரொருவரின் ஊதியத்திலிருந்து அத்தகைய ஊழியரின் சம்மதத்துடன் கழிக்கப்படுமென்பதுடன் உயர்ந்த தனியாள் வருமான வரியைச் செலுத்துவதற்கு வதியும் எவரேனும் ஊழியர் மறுக்குமிடத்து அவர் ஏற்புடைத்தான வரிப் பிரிவுகள் மற்றும் வீதங்களின் அடிப்படையில் தனியாள் வருமான வரியைச் செலுத்துவதற்கு பொறுப்புடையவராவர். எனினும், வதியாத ஊழியர்களைப் பொறுத்தவரையில், உயர்ந்த தனியாள் வருமான வரியானது அத்தகைய ஊழியரின் சம்மதத்தினைக் கருத்திற் கொள்ளாது தொடர்பான தொழில்தருநர்களினால் அவரின் ஊதியத்திலிருந்து கழிக்கப்படும். அதேவேளை, கட்டடவாக்கத் துறைக்கு ஏற்புடைத்தான கம்பனி வருமான வரி வீதங்கள் 28 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் வங்கித் தொழில் நிதி, காப்புறுதித்தொழில் மற்றும் வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளுக்கும் அவ்வரி 2020 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. மேலும், பிடித்துவைத்தல் வரி மற்றும் பொருளாதாரப் பணிக் கட்டணம் என்பன 2020 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அகற்றப்பட்டன. இருப்பினும்கூட, பிடித்துவைத்தல் வரியின் ஏற்புடைத்தன்மையானது வெற்றிபெறும் லொத்தர்கள், வெகுமதிகள், குதிரைப்பந்தயங்கள் மற்றும் சூதாட்டங்கள், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் நடாத்தப்படும் ஏலங்களில் விற்பனை செய்யப்படும் ஏதேனும் இரத்தினக்கற்கள் மற்றும் வதிவற்ற எவரேனும் ஆட்களுக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ஆகிய தொகைகள் மீது தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

- **நாணயமாற்று வீதத்தின் மீதான ஏதேனும் அழுத்தங்களையும் கருத்திற்கொண்டு பன்னாட்டு பண்ட விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் சுங்கத் தீர்வைகளுக்கு பல மாற்றங்கள் செய்யப்பட்டன.** இதன்படி, பெற்றோல் மற்றும் டீசலின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைக்கு சில மேல் நோக்கிய திருத்தங்கள் செய்யப்பட்ட வேளையில் பெற்றோல் மற்றும் டீசல் என்பனவற்றின் சில்லறை விலைகள் பெற்றோல் மற்றும் இறக்குமதி மீது மேலதிகக் கட்டணங்களை விதித்ததன் மூலம் தற்போதைய மட்டங்களில் தொடர்ந்தும் பேணப்பட்டன. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் சென்மதி நிலுவையின் மீதும் நாணயமாற்று வீதங்களின் மீதுமான அழுத்தத்தினைப் பரிசீலனையில் கொண்டு மீன் உற்பத்தி, மண்டறின் தோடம்பழங்கள், தானிய உற்பத்திகள், மா வகைகள்,

6

2 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு 2020 ஓகத்து 26ஆம் நாள் அமைச்சரவை ஒப்புதலளித்ததுடன் அது சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், பொருளாதார பணிக் கட்டணத்தினை நீக்குவதற்கான பொருளாதாரப் பணிக் கட்டண (திருத்த மசோதாவிற்கு) 2020 ஒத்தோபர் 7ஆம் நாளன்று பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டதுடன் சபாநாயகரின் உறுதிப்படுத்தலுக்காகக் காத்திருக்கிறது. மேலும், 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்திற்கான திருத்தங்கள் 2020 ஓகத்து 26ஆம் நாளன்று அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்டதுடன் அது சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

காய்கறிகள் மற்றும் பழச்சாறு உள்ளிட்ட பழ உற்பத்திகள், தேயிலை மற்றும் கோப்பிச் சாரங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் என்பனவற்றின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை 2020 ஏப்பிறலில் 25-50 சதவீத வீச்சில் அதிகரிக்கப்பட்டன. 2020இன் இதுவரையான காலப்பகுதியில் சுங்கத் தீர்வையில் ஏற்பட்ட மாற்றங்கள் இவ்வறிக்கையின் பின்னிணைப்பு 1 (முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்கள் மற்றும் வழிமுறைகள்) என்ற பிரிவின் கீழ் விரிவாக தரப்பட்டுள்ளன.

- **உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டும் அதேவேளையில் உள்நாட்டுச் சந்தை விலைகளின் தளம்பல்கள் குறைக்கப்படும் விதத்திலும் தெரிவுசெய்யப்பட்ட விடயங்களின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை திருத்தப்பட்டன.** மீன் (உடன், குளிரூட்டப்பட்ட மற்றும் உறையவைக்கப்பட்டவை), யோகட், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், உள்ளி, பீஸ் (உடைக்கப்பட்டவை), கடலை வகை, சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு வகை (முழு, உடைக்கப்பட்டவை), பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தப்பட்டவை), திராட்சை (உடன்), அப்பிள் (உடன்), பியர்ஸ், செறீஸ் (ஏனையவை), உலர்ந்த திராட்சை மற்றும் சிலோஸ், மிளகாய் (நொருக்கப்பட்டவை அல்லது முழுமையானவை), சோளம், நிலக்கடலை (கோதுடன்), மாஜரீன், தகரத்திலடைக்கப்பட்ட மீன், பீற் மற்றும் கரும்புச் சீனி என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை மேல் நோக்கித் திருத்தப்பட்ட வேளையில் செலிமன்ரைன்ஸ் (உடன் மற்றும் உலர்த்தியவை), திராட்சைப்பழம் (போமிலோஸ் உட்பட - உடன் மற்றும் உலர்த்தியவை), எலுமிச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), குயின்சஸ், அப்பிறிக்கோட், புளிப்பான செறீஸ், பீச்சர்ஸ் (நெக்கராறினஸ் உட்பட), மரக்கறிக் கொழுப்பு மற்றும் எண்ணெய் மற்றும் அவற்றின் பிரிவுகள், மாஜரீன் (ஏனையவை), தொற்றுநீக்கிகள் மற்றும் முகக்கவசங்கள் மீது சிறப்புப் பண்டத் தீர்வைகள் விதிக்கப்பட்டன. மேலும், 2020 பெப்புருவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் மீன் (ஜக் அன்ட கோஸ் மைக்கரல்), தோடம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), திராட்சை (உலர்த்தியவை) மற்றும் மரக்கறி எண்ணெய் என்பன மீதான சிறப்புப் பண்டத் தீர்வைக்கு மேல் நோக்கிய மற்றும் கீழ் நோக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டன.

- **அரசிறைச் சேகரிப்பு முகவர்களின் வினைத்திறன் மற்றும் காத்திரமான தன்மையினை மேம்படுத்தும் பொருட்டு 2020ஆம் ஆண்டுப்பகுதியில் வரி நிருவாகத்தினை பலப்படுத்துவதற்கு பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதற்கமைய, தன்னியக்கச் செய்முறைகளை விரைவுபடுத்தும் நோக்குடன் இலங்கைச் சுங்கத்தின் சுங்கத் தரவுகளுக்காக தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமைக்கு பல திருத்த முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. காகிதாதிகளற்ற தீர்ப்பனவுச் செய்முறைகளுக்கு வசதியளிக்கும் பொருட்டும் அதே வேளையில், அரசாங்கத்தின் சமூக இடைவெளி வழிகாட்டலை பின்பற்றுகின்ற விதத்திலும் சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்கப்படுத்தப்பட்டமுறை திருத்தியமைக்கப்பட்டமையானது நேரில் வருகை தராமலே இலங்கைச் சுங்கத்தின் ஆவணங்களை இறக்குமதியாளர்கள் சமர்ப்பிப்பதனை இது இயலச்செய்கிறது. மேலும், சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்கப் படுத்தப்பட்ட முறைமை கொள்கலன் இ-ஆவணங்களுக்கு திருத்தங்கள் செய்யப்பட்டமையானது அலுவலர்கள் அலுவலகங்களுக்குச் செல்லாமலேயே விபரங்களைப் பரிசோதித்துக் கொள்வதனை இயலுமைப்படுத்தியது. சுங்கத் தீர்ப்பனவுடன் தொடர்பான வேலைகளின் வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் அதிகரிக்கும் நோக்குடன் சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமை கொள்கலன் இ-ஆவணங்களுக்கு பிம்பப்படுத்தல்களை உள்ளடக்குவதற்கான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்ட வேளையில் சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்கப் படுத்தப்பட்ட முறைமையின் தெரிவு செய்யப்பட்ட மாதிரி முறைமையிலுள்ள கிடைக்கத்தக்க தரவுகளின் அடிப்படையில் தன்னியக்கமாக இற்றைப்படுத்தப்படும் தெரிவு செய்யப்பட்ட பட்டியலொன்றை அறிமுகப்படுத்தியதன் மூலம் மீளப்பொறியியற்படுத்தப்பட்டது. மேலும், நாளாந்த அரசிறைச் சேகரிப்புக்களை ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் கீழ் அறிக்கையிடும் பொருட்டு நிதி அமைச்சிற்கு இலங்கை சுங்கத்தில் அரசிறை அறிக்கையிடல் மாதிரியொன்று உருவாக்கப்பட்டது.

- **இவ்வாண்டுப்பகுதியில் அரச செலவினம் காத்திரமான முறையில் முகாமைப்படுத்தப்படுவதனை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் பல்வேறுபட்ட வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியிருந்தது.**

இதன்படி, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக நலிவடைந்த அரசிறைத் திரட்டல்களைப் பரிசீலனையில் கொண்டு அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும் ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்களுக்குள் செலவினங்களை மட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் அதேவேளையில் அத்தியாவசியமல்லாத செலவினங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கடுமையாக ஆலோசனை வழங்கப்பட்டன. மேலும், அரச துறை அதேபோன்று தனியார் துறையின் அனைத்து ஊதிய அமைப்புக்களையும் மீளாய்வு செய்வதற்கும் தேசிய கூலி கொள்கையொன்றினை வடிவமைப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் அரசாங்கத்திற்கு மதியுரைப்பதற்கும் உதவுவதற்குமாக 2020 பெப்புருவரியில் தேசிய சம்பள ஆணைக்குழு நிறுவப்பட்டது.

- **ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயன்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற வேளையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஆதரவளிக்கும் விதத்தில் பல்வேறு வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன.** இதற்கமைய, எண்ணியல் முறையிலான உயிர்வாழ்வுச் சான்றிதழ் செயற்றிட்டம் 2020இன் முதலரைப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இது தற்போதுள்ள ஆவணப்படுத்தல் செயன்முறைகளுக்குப் பதிலாக கைவிரல் அடையாளத்தினைப் பயன்படுத்தி ஓய்வூதியம் பெறுவோர் தமது உயிர்வாழ்வுச் சான்றிதழை வழங்குவதற்கு அவர்களை அனுமதிக்கின்றது. ஓய்வூதியம் பெறுவோரின் உயிர்வாழ்வு/வதிவிடத்தினைச் சரிபார்த்துக் கொள்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிரதேச செயலகத்திற்கு உயிர்வாழ்வுச் சான்றிதழ் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதனால் இச்செயற்றிட்டத்தினை எளிமைப்படுத்துவதற்கும் ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயன்முறைகளை தன்னியக்கப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயன்முறையின் துல்லியத்தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் அதிகரிக்கும் நோக்குடன், தொடர்பான ஓய்வூதியக்காரர் கடுமையான சுகயீனம், மனபேதலிப்பு அல்லது உடல் ஊனம் என்பனவற்றினால் ஏற்படும் இடர்ப்பாடுகளினால் ஓய்வூதியத்தினைப் பெறமுடியாமல் போகும் பொழுது ஓய்வூதியக்காரர் பாதுகாவலரொருவரை நியமிப்பதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் செயற்பாடுகள், கொடுப்பனவுகளின் செய்முறையின் துல்லியத்தன்மையினையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்தும் பொருட்டு புதிய வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்தியதன் மூலம் பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவுகளை இறுதிப்படுத்த முடியாமல் இருக்கின்ற அண்மையில் ஓய்வுபெற்ற அரச அலுவலர்களுக்கு 2020 ஏப்பிறலிலும் மேயிலும் மாதாந்தப் படியாக ரூ.25,000 இனை வழங்குவதற்காக பொது நிருவாகச் சுற்றறிக்கை இல.08/2020 அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு விடுக்கப்பட்டது.

- **பின்தங்கிய வீட்டுத்துறையினரின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் நோக்குடன் அரசாங்கம் புதிய ஆட்சேர்ப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ள வேளையில் பொருளாதாரத்திற்கான அவர்களின் உற்பத்திப் பங்களிப்பினையும் உறுதிப்படுத்துகின்றது.** இதற்கமைய, 2020 சனவரியில் அரசாங்கம் குறைந்த வருமானமுடைய குடும்பங்களிலிருந்து 100,000 தேர்ச்சியற்ற தனிப்பட்டவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது. மேலும், அரசாங்கம், முற்போந்த மூன்றாண்டுக் காலப்பகுதியில் தொழிலின்றி இருந்த 50,000 தொழிலற்ற பட்டதாரிகளுக்கும் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களுக்கும் வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்காக மற்றொரு ஆட்சேர்ப்புத் திட்டத்தினை 2020 பெப்புரவரியில் ஆரம்பித்தது. பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டமையினைத் தொடர்ந்து இவ்வாட்சேர்ப்புக்கள் 2020 மார்ச்சில் இடைநிறுத்தப்பட்டதுடன் 2020 செத்தெம்பர் தொடக்கத்தில் மீளவாரம்பிக்கப்பட்டதுடன் 10,000 மேலதிக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது.

- **அரசாங்கத்தின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சமூகத்திலுள்ள தேவையான பிரிவினருக்கு ஆதரவளிப்பதில் கவனத்தினைச் செலுத்திய வேளையில் நலன்புரி நன்மைகள் சபையின் தொழிற்பாடுகளை பலப்படுத்துவதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன.** இதன்படி, கொவிட்-19 உலகளாவிய தொற்றுக் காலப்பகுதியில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களினால்

6

எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடுகளை பரிசீலனையில் கொண்டு 2020 ஏப்பிறலிலும் மேயிலும் மூத்தபிரசைகள், மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளிகள், வேளாண்மையாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த நாளாந்த கூலிபெறுவோர் ஆகியோருக்கு காசுப்படியாக ரூ.5,000 இனை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், முடக்கல் இடம்பெற்ற காலப்பகுதியில் சமுர்த்தி நன்மைபெறுவோருக்கு வட்டியற்ற ரூ.10,000 முற்பணத்தினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், பொது வசதிகளுக்கான பட்டியல்களைக் கொடுப்பனவு செய்ய பொதுமக்களுக்கு ஒரு மாத சலுகைக்காலம் வழங்கப்பட்டது. மேலும், கொவிட்-19இனைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அலுவலர்கள், முப்படையினர், அரச ஊழியர்கள் மற்றும் சுகாதாரத் துறையிலுள்ள அலுவலர்களுக்கான அக்கிரகார காப்புறுதி நன்மைகள் இரட்டிப்பாக்கப்பட்டன. இவ்வாண்டுப்பகுதியில், நலன்புரி நன்மைகள் சபை, நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்பான தகவல்களைச் சேமித்து வைக்கும் இலத்திரனியல் தரவுத் தளமான சமூக பதிவுத் தகவல் முறைமையின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமுர்த்தித் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டது. பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நன்மைபெறுநர்களைத் தெரிவுசெய்யும் நடைமுறைகளை உயர்த்துவதற்காக சமூக பதிவுத் தகவல் முறைமையை இறுதிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நலன்புரி முகாமைத்துவ முறைமைக்குள் விரிவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், சமூக பதிவுத் தகவல் முறைமையின் நாளாந்த தொழிற்பாடுகளை கண்காணிப்பதற்கும் அதேவேளை நலன்புரி நன்மைகள் சபையின் நிறுவன ரீதியான அமைப்பினை பலப்படுத்துவதற்காகவும் கண்காணிப்பு முறைமையொன்றினை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மையினை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பல்வேறு கொள்கை வழிமுறைகள் இறைத் தொழிற்பாடுகள் மீதான சுமைகளை குறைத்திருந்தது.** இதன்படி, அந்நிறுவனங்களில் நிதியியல் ஆற்றலை வலுப்படுத்தும் பொருட்டு அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் முக்கிய பதவிகளுக்குப் பொருத்தமான ஆட்களை நியமிப்பதற்காக 2020இன் ஆரம்பத்தில் சிறப்புக் குழுவொன்று நிறுவப்பட்டது. மேலும்,உள்நாட்டு பெற்றோலிய விலைகளின் தளம்பல்களைக் குறைப்பதற்காக எரிபொருள் விலை சமநிலைப்படுத்தும் நிதியம் நிறுவப்பட்ட வேளையில் உலகளாவிய சந்தையில் காணப்படும் தாழ்ந்த எண்ணெய் விலைகளின் நன்மைகள் மிகச் சிக்கனமானதும் ஆற்றல் வாய்ந்ததுமான சமமான விதத்தில் பகிரப்பட்டன. இதற்கமைய, 2020 மார்ச் 23ஆம் திகதி மத்திய வங்கிக்கு திறைசேரி உண்டியல்களை வழங்கியதன் மூலமாகக் கிடைத்த ரூ.50 பில்லியன் (முகப்பெறுமதி அடிப்படையில்) ஆரம்ப மூலதனத்துடன் நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. அதேவேளைபெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிகள் மீதான மேலதிகக் கட்டணத்திலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறை எரிபொருள் விலை சமநிலைப்படுத்தும் நிதியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாண்டுப்பகுதியின் இதுவரையான காலப்பகுதியில் எரிபொருள் விலை சமநிலைப்படுத்தும் நிதியம் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பனவற்றிற்குச் சேரவேண்டிய நிதியங்களைத் தீர்ப்பனவு செய்யப் பயன்படுத்தப்பட்டது.

- **2019இல் மாற்றமின்றிக் காணப்பட்ட இலங்கையின் நாட்டிற்கான கொடுகடன் தரமிடல் 2020இல் தரம் குறைக்கப்பட்டது.** 2020 ஏப்பிறல் மற்றும் மே மாதங்களில் பிட்ஜ் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவர் குளோபல் போன்ற தரமிடல் நிறுவனங்கள் இலங்கையின் நாட்டிற்கான தரமிடலை 'B-' இற்குக் குறைத்த வேளையில் தோற்றப்பாட்டை முறையே 'எதிர்க்கணியம்' மற்றும் 'உறுதித்தன்மை' என உறுதிப்படுத்தியிருந்தது. 2020 செத்தெம்பரில், மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விசஸ் 2020 ஏப்பிறலில் இலங்கையின் தரமிடலை 'தரம் குறைக்கப்பட்டதற்கான' மீளாய்வின் கீழ் (B2) நிர்ணயித்ததுடன் எதிர்வரும் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளின் சவால்களை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் இரண்டு புள்ளிகளினால் 'Caa1' இற்குக் குறைக்கப்பட்டதுடன் தோற்றப்பாட்டை 'எதிர்க்கணியத்திலிருந்து' 'உறுதியான' தன்மைக்கு மாற்றியிருந்தது. எனினும், அரசாங்கம் 2020 ஒத்தோபர் ஆரம்பத்தில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உட்பட 2020இன் இதுவரையான அனைத்துப் படுகடன் தீர்ப்பனவுக் கடன்பாடுகளையும் தீர்ப்பனவு செய்திருக்கின்றது.

- **2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் 2019இல் கட்டியெழுப்பப்பட்ட தாங்கிருப்புக்கள் 2020இன் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்ட வேளையில், 2019-2023 காலப்பகுதிக்கான நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் கீழ் அடித்தள அளவீட்டுக் குறியீட்டினை நிர்ணயிப்பது 2020இன் இதுவரையான காலப்பகுதியில் முன்னேற்றங்களைப் பதிவுசெய்திருந்தது.** தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், அதன் முதலாவது பொறுப்பு முகாமைத்துவத்தினை அடிப்படையாகக் கொண்ட ரூ.15 பில்லியன் தொகையான திறைசேரி முறிகளை 2019 ஒத்தோபரில் வழங்கியதன் மூலமும் அதனைத் தொடர்ந்து 2019 திசெம்பரில் மற்றொரு ரூ.15 பில்லியன் திறைசேரி முறிகளையும் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலமும் தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள் 2019இல் மேற்கொள்ளப்பட்டன. 2019இல் கட்டியெழுப்பப்பட்ட தாங்கிருப்பு 2020இன் தொடக்கப்பகுதியில் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது. நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயம் முக்கியமாக அரசின் வரவு செலவுத்திட்டத்தின் தேவைகளை சாத்தியமானளவிற்குக் குறைந்த செலவில் நிதியிடுவதனையும் அதேவேளை படுகடன் சொத்துப்பட்டியல்களின் இடர்நேர்வுகளை முன்மதியுடைய மட்டங்களில் முகாமைப்படுத்துவதனையும் உறுதிப்படுத்தும் விதத்தில் படுகடன் சாதனங்கள் பொருத்தமான உள்ளமைப்பொன்றில் கட்டியெழுப்புவதன் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தியது. படுகடன் இயக்கவாற்றல் குறிகாட்டிகள், 2018 இறுதியில் அடையாளம் காணப்பட்ட அடித்தளத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் முன்னேற்றங்களைப் பதிவுசெய்தது. 2020 ஒகத்து இறுதியில் மொத்தப் படுகடனின் சதவீதமாக வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை அடிப்படை மட்டமான 54.0 சதவீதத்திலிருந்து 50.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளையில் வெளிநாட்டு நாணயப் படுகடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரி நேரம் அடிப்படை மட்டமான 6.6 ஆண்டுகளிலிருந்து 2020 ஒகத்து இறுதியில் 7.3 ஆண்டுகளுக்கு அதிகரித்தது. எனினும், மொத்தப் படுகடனின் சதவீதமாக குறுங்காலப் படுகடன் முதிர்ச்சிகளின் அடிப்படை மட்டமான 16.4 சதவீதத்திலிருந்து 18.6 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

## அரச வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

### முக்கிய இறை நிலுவைகள்

- **முக்கிய இறை நிலுவைகள் 2020 சனவரியிலிருந்து யூலை வரையிலான காலப்பகுதியில் காணப்பட்ட குறைந்த வருமானத் திரட்டல் மற்றும் மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வு என்பனவற்றின் தாக்கம் காரணமாக குறிப்பிடத்தக்களவில் பாதிக்கப்பட்டிருந்தது.** 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட மொ.உ.உற்பத்தியின்[3] 4.6 சதவீதத்திலிருந்து (ரூ.684.1 பில்லியன்) மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 5.6 சதவீதத்திற்கு (ரூ.872.6 பில்லியன்) அதிகரித்திருந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஆரம்பப் பற்றாக்குறை 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திலிருந்து (ரூ.122.5 பில்லியன்) மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 1.9 சதவீதத்திற்கு (ரூ.288.9 பில்லியன்) அதிகரித்தது. 2020 சனவரியிலிருந்து யூலை வரையிலான காலப்பகுதியில் அரசின் குறைச் சேமிப்புக்களைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2019இன் இதே காலப்பகுதியின் மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதத்திலிருந்து (ரூ.311.8 பில்லியன்) மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்கு (ரூ.694.5 பில்லியன்) அதிகரித்தது.

## அரச அரசிறை மற்றும் கொடைகள்

### அரசிறை

- **வரி இறைச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் காரணமாக அரசின் அரசிறையானது 2019இன் தொடர்பான காலப்பகுதியின் 6.9 சதவீதத்திலிருந்து 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியில் 4.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.** பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதற்காக சனாதிபதி தேர்தலின் பின்னர் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளுக்கு மத்தியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து குறைவடைந்த பொருளாதார நடவடிக்கையின் தாக்கத்தினைப் பெருமளவிற்குப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரசின்

3 இலங்கை மத்திய வங்கியின் மொ.உ.உற்பத்தி எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது.

6

வரைபடம் 6.2

முக்கிய இறைக் குறிகாட்டிகள் (அ)




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) 2020ஆம் ஆண்டிற்கான தரவுகள் மத்திய வங்கியின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

அரசிறை வீழ்ச்சியடைந்தது.பெயரளவு நியதிகளில், 2020இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் அரசின் அரசிறை 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,031.9 பில்லியனிலிருந்து ரூ.763.2 பில்லியனுக்கு 26.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அரசிறைத் திரட்டலில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி வருமான வரிகள், கலால் வரிகள், பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, துறைமுகம் மற்றும் விமானநிலைய தீர்வை மற்றும் செஸ் தீர்வை ஆகிய முக்கிய வரி வகைகளில் அவதானிக்கப்பட்டன. எனினும், ஆய்விற்குரிய காலப்பகுதியில் வரியல்லா அரசிறை ரூ.92.8 பில்லியனுக்கு 6.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2019இன் நிதியியல் கூற்றின் அடிப்படையில் மத்திய வங்கியின் பகிர்ந்தளிக்கப்பட்ட இலாப மாற்றல்களாக ரூ.24.0 பில்லியன் கொண்ட தொகை மாற்றல் செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

- **2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வருமான வரிகளிலிருந்தான அரசிறை 2019இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.126.0 பில்லியனுக்கு 31.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.** வருமான வரிகளிலிருந்தான அரசிறை 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 1.2 சதவீதத்திலிருந்து 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியில் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2020 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உழைக்கும் போதே செலுத்தும் வரியும் பொருளாதார பணிக் கட்டணமும் ஒழிக்கப்பட்டமை 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வருமான வரி அரசிறையில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தது. இதன்படி, 2019 நிதியியல் ஆண்டிற்காக உழைக்கும் போதே செலுத்தும் வரியிலிருந்து சேகரிக்கப்பட்டு 2020இல் அனுப்பப்பட்ட அரசிறை, உழைக்கும் போதே செலுத்தும் வரிக்குப் பதிலாக 2020 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட உயர்ந்த தனியாள் வருமான வரியின் பேரிலான அரசிறையுடன் சேர்த்து 2019இன் இதே காலப்பகுதியின் உழைக்கும் போதே செலுத்தும் வருமான வரியான ரூ.29.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியிலிருந்து யூலை வரையிலான காலப்பகுதியில் ரூ.9.1 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டது. 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் 2019 நிதியாண்டிற்கென முக்கியமாக பொருளாதார பணிக் கட்டணத்திலிருந்து சேகரிக்கப்பட்டு 2020இல் அனுப்பப்பட்ட அரசிறை 2019இன் தொடர்பான காலப்பகுதியின் 40.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.13.6 பில்லியனைப் பதிவுசெய்தது. பிடித்துவைத்தல் வரிக்குச் செய்யப்பட்ட திருத்தத்தினைத் தொடர்ந்து பிடித்துவைத்தல் வரியிலிருந்தான அரசிறைச் சேகரிப்பும் பெயரளவு நியதிகளில் ஆய்விற்குரிய காலப்பகுதியில் ரூ.6.5 பில்லியனுக்கு 77.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரியிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.85.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.96.7 பில்லியனுக்கு அதிகரித்து முன்னைய நிதியாண்டுடன் தொடர்புடைய இறுதி வரிகளின் கொடுப்பனவின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது.

- **2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை பெயரளவு நியதிகளிலும் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் வீழ்ச்சி அடைந்தமைக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையும் 2019இன் பிற்பகுதியில் பெறுமதிசேர் வரியில் செய்யப்பட்ட திருத்தங்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன.** 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் பெறுமதிசேர்

6

வரியிலிருந்தான அரசிறை ரூ.119.3 பில்லியனுக்கு 55.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் இது 2019இன் தொடர்பான காலப்பகுதியின் மொ.உ.உற்பத்தியின் 1.8 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் ரூ.74.7 பில்லியனுக்கு 54.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதியுடன் தொடர்பான நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறையானது2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.100.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 44.7 பில்லியனுக்கு 55.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் மொத்த வரி அரசிறையின் சதவீதமாக பெறுமதிசேர் வரி அரசிறை 2019இன் தொடர்பான காலப்பகுதியின் 28.1 சதவீதத்திலிருந்து 17.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் மொத்த அரசிறைக்கான பெறுமதிசேர் வரி அரசிறையின் பங்களிப்பு 2019 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 25.7 சதவீதத்திலிருந்து 15.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

- **பெயரளவு நியதிகள் மற்றும் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டு நியதிகளிலும் கலால் தீர்வையிலிருந்தான அரசிறையானது குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சி அடைந்தமைக்கு உந்து ஊர்திகள், குடிவகை, சிகரெட் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் தீர்வையிலிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட குறைப்பு என்பனவே முக்கிய காரணங்களாகும்.** கலால் வரியிலிருந்தான அரசிறையானது மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ரூ.184.9 பில்லியனுக்கு 18.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் இது, 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 1.5 சதவீதத்திலிருந்து 1.2 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். வெளிநாட்டுத் துறை மீதான அழுத்தத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் உந்து ஊர்திகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தைப் பிரதிபலித்து 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 39.8 சதவீதத்தினால் ரூ.42.7 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, பெற்றோலிய உற்பத்திகளின் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.35.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் ரூ.31.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் குடிவகை மீதான கலால் வரியிலிருந்தான அரசிறை 2019இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட ரூ.66.2 பில்லியனிலிருந்து ரூ.60.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, புகையிலை மற்றும் சிகரெட் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.48.3 பில்லியனுக்கு 5.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை - 6.1

அரசிறையின் பொருளாதார பகுப்பாய்வு

ரூ. பில்லியன்

| விடயம் | 2018 | 2019 (அ) | 2019 சன - யூலை (அ) | 2020 சன - யூலை (அ) |
|---|---|---|---|---|
| **வரி வருமானம்** | **1,712.3** | **1,734.9** | **944.4** | **670.4** |
| வருமான வரி | 310.4 | 427.7 | 184.9 | 126.0 |
| பெறுமதி சேர் வரி | 461.7 | 443.9 | 265.6 | 119.3 |
| கலால் வரிகள் | 484.3 | 399.5 | 225.8 | 184.9 |
| இறக்குமதித் தீர்வைகள் | 97.0 | 98.4 | 55.2 | 60.4 |
| துறைமுகங்கள் மற்றும் வானூர்தி தீர்வை | 113.9 | 112.2 | 64.5 | 62.4 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 71.4 | 70.7 | 42.2 | 1.8 |
| சிறப்புப் பண்டத் தீர்வை | 75.8 | 70.4 | 42.2 | 46.5 |
| செஸ் | 53.4 | 50.7 | 28.3 | 28.1 |
| ஏனைய வரிகள் | 44.4 | 61.5 | 35.7 | 41.0 |
| வரி அல்லா வருமானம் | **207.7** | **156.0** | **87.5** | **92.8** |
| மொத்த வருமானம் | **1,920.0** | **1,890.9** | **1,031.9** | **763.2** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* நிதி அமைச்சு

- **நாணயமாற்று வீதம் மற்றும் சென்மதி நிலுவை என்பன மீதான அழுத்தத்தினைக் குறைக்கும் நோக்குடன் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளில் செய்யப்பட்ட கட்டுப்பாடுகளின் முக்கிய காரணமாக 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் பல இறக்குமதி தொடர்பான வரிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் பெயரளவு நியதிகளில் 2019இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்திருந்தன.** இறக்குமதியுடன் தொடர்பானகலால் தீர்வையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் மேலாக, 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் துறைமுகம் மற்றும் விமானநிலைய தீர்வையிலிருந்தான அரசிறை 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 64.5 பில்லியனிலிருந்து ரூ.62.4 பில்லியனுக்கு 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், 2020

யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் செஸ் தீர்வையிலிருந்தான அரசிறை 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.28.3 பில்லியனிலிருந்து ரூ.28.1 பில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. எனினும், ஆய்விற்குரிய காலப்பகுதியில் இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறையானதுரூ.55.2 பில்லியனிலிருந்து ரூ.60.4 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு பெற்றோல் மற்றும் டீசலின் இறக்குமதிகள் மீதான தீர்வையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறை 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.42.2 பில்லியனிலிருந்து ரூ.46.5 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு தெரிவுசெய்யப்பட்ட விடயங்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வைகளுக்குச்

வரைபடம் 6.3
அரசிறையின் உள்ளடக்கம்




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்களே முக்கிய உதவியாக அமைந்தன. 2019ஆம் ஆண்டிற்காக சேகரிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது 2020இற்கு மாற்றப்பட்டமையின் காரணமாக 2019 திசெம்பரில் நீக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் சில நிலுவைக் கொடுப்பனவுகளுடன் சேர்ந்து ரூ.1.8 பில்லியன் கொண்ட தொகையினைப் பதிவுசெய்தது.

- **2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வரியல்லா அரசிறை, பெயரளவு நியதிகளில் அதிகரித்த வேளையில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்பட்டது.** வரியல்லா அரசிறை 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.87.5 பில்லியனிலிருந்து ரூ.92.8 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு, 2019இன் நிதியியல் கூற்றுக்களின் அடிப்படையில் ரூ.24.0 பில்லியன் கொண்ட மத்திய வங்கியின் பகிரத்தக்க இலாபம் மாற்றல் செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். மேலும்,மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வட்டி வருமானம் ரூ.13.5 பில்லியனுக்கு 33.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புக்கள் ரூ.17.7 பில்லியனுக்கு 9.2 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், கட்டணம் மற்றும் விதிப்புக்கள், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் மாற்றல்கள் முறையே 36.3 சதவீதத்தினாலும் 57.8 சதவீதத்தினாலும் ரூ.29.6 பில்லியனுக்கும் 5.1 பில்லியனுக்கும் வீழ்ச்சியடைந்தன.

6

## கொடைகள்

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய உதவிகளின் தாக்கத்தை முக்கியமாகப் பிரதிபலித்து 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வெளிநாட்டுக் கொடைகளின் பகிர்ந்தளிப்பானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்திருந்தது.** இதன்படி, 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதிக்கான வெளிநாட்டுக் கொடை 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ1.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.2.1 பில்லியனாக விளங்கின.

## அரச செலவினமும் தேறிய கடன்வழங்கலும்

- **2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 11.4 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 10.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மீண்டெழும் செலவினத்தில் அதிகரிப்பொன்று காணப்பட்டமைக்கிடையிலும் மூலதனச் செலவினங்களில் காணப்பட்ட கடுமையான குறைப்பே காரணமாக அமைந்தது.** 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் அரச செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.1,717.1 பில்லியனிலிருந்து ரூ.1,637.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

- **2020 யூலையுடன் முடிவடைந்த முதல் 7 மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினமானது 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 8.9 சதவீதத்திலிருந்து 9.4 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு சம்பளங்கள் மற்றும் கூலிகள், மானியங்கள் மற்றும் மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** பெயரளவு நியதிகளில், 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் மீண்டெழும் செலவினம் 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,343.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,457.7 பில்லியனுக்கு 8.5 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் ரூ.583.6 பில்லியனுக்கு 3.9 சதவீதத்தினால் உயர்வடைந்தமைக்கு வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் 10.8 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். இதன்படி, 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.154.2 பில்லியனிலிருந்து ரூ.170.8 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு 2020 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் வெளிநின்ற வர்த்தக படுகடன் மீதான அதிகரித்த வட்டி செலுத்தல்களில் முக்கிய காரணமாக 2020இன் தொடக்கத்திலிருந்து அரச பிணையங்கள் மீதான விளைவுகளின் கீழ் நோக்கிய சீராக்கத்தில் அவதானிக்கப்பட்டவாறு கடன்பாட்டுச் செலவுகளில் குறைப்பொன்று காணப்பட்டமைக்கிடையிலும் 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.407.4 பில்லியனிலிருந்து ரூ.412.8 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு 2020 யூலை இறுதியிலுள்ளவாறு வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் இருப்பு 16.3 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். வட்டிக் கொடுப்பனவுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 3.7 சதவீதத்திலிருந்து 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியில் 3.8 சதவீதத்திற்கு அதிகரித்தன. 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.388.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.451.4 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு பொது நிருவாகச் சுற்றறிக்கை இல.09/2019 இன் கீழ் 2019 யூலையிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அரசதுறை ஊழியர்களுக்கு மாதாந்தம் ரூ.2,500 கொண்ட இடைக்காலப் படியொன்று அறிமுகப்படுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும். பொது நிருவாக சுற்றறிக்கை இல.03/2016 இன்படி அரச துறை சம்பளங்களின் சீராக்கம் 2020 சனவரி 1 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிறைவடைந்தமையும் பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. பெயரளவு நியதிகளில் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம்

### அட்டவணை 6.2
### செலவினத்தின் பொருளாதாரப் பகுப்பாய்வு

ரூ. பில்லியன்

| விடயம் | 2018 | 2019 (அ) | 2019 சன - யூலை (அ) | 2020 சன - யூலை (அ) |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **2,089.7** | **2,301.2** | **1,343.7** | **1,457.7** |
| இதில், சம்பளங்களும் கூலிகளும் | 626.0 | 686.5 | 388.2 | 451.4 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 852.2 | 901.4 | 561.6 | 583.6 |
| வெளிநாட்டு | 212.7 | 248.6 | 154.2 | 170.8 |
| உள்நாட்டு | 639.5 | 652.8 | 407.4 | 412.8 |
| சமுர்த்தி | 39.2 | 44.7 | 22.7 | 30.7 |
| ஓய்வூதியங்கள் | 194.5 | 227.7 | 124.3 | 140.7 |
| வளமாக்கி மானியம் | 26.9 | 35.0 | 25.3 | 18.6 |
| **மூலதனம் மற்றும் தேறிய கடன்** | **603.5** | **614.1** | **373.4** | **180.2** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **2,693.2** | **2,915.3** | **1,717.1** | **1,637.9** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* நிதி அமைச்சு

6

ரூ.340.1 பில்லியனுக்கு 8.7 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் இது 2019 இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதத்திலிருந்து 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு ஓய்வூதியம் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவுகள் மீதான உயர்ந்த செலவினமே முக்கிய காரணமாகும். இதன்படி, 2019 யூலையிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஓய்வூதிய முரண்பாடுகள் சரிசெய்யப்பட்டமையைப் பிரதானமாக பிரதிபலிக்கின்ற விதத்தில் 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.124.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.140.7 பில்லியனுக்கு அதிகரித்தது. 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினம் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.22.7 பில்லியனிலிருந்து ரூ.30.7 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வளமாக்கி மானியம் மீதான செலவினம் ரூ.18.6 பில்லியனுக்கு 26.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வளமாக்கியுடன் தொடர்பான செலவினத்தினை தீர்ப்பனவு செய்வதற்கான தவணைக் கடன் வசதிகளை ஏற்பாடு செய்வதன் விளைவாக பதிவுசெய்தலில் ஏற்பட்ட தாமதங்களே முக்கிய காரணமாகும்.

- **2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதிகளிலும் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதத்திலும் கடுமையாக வீழ்ச்சியடைந்தன.** மூலதனச் செலவினத்தில் ஏற்பட்ட இக்குறைப்பிற்கு மூலதனச் செலவினம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமையும் 2019இலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட பாரியளவிலான செலுத்தப்படாத உண்டியல்கள் மற்றும் கணக்கு வாக்குகளின் கீழான புதிய மூலதனச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையினதும் காரணமாக ஏற்பட்ட தேறிய கடன்வழங்கலுமே முக்கிய காரணமாகும். இதன்படி, பெயரளவு நியதிகளில் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கலானது 2020 யூலையுடன் முடிவடைந்த முதல் ஏழு மாத காலப்பகுதியில் 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.373.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.180.2 பில்லியனுக்கு 51.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதே வேளை, ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் கொவிட் - 19 தொற்றுநோயின் காரணமாக அரசாங்கமானது கணிசமான செலவினத்தையும் அடைந்திருந்தது.

வரைபடம் 6.4
அரச செலவினத்தின் உள்ளடக்கம்




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

### வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடல்

- **2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை உள்நாட்டு மூலங்களினூடாக நிதியிடப்பட்ட வேளையில் வெளிநாட்டு நிதியிடல் தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்தது.** இக்காலப் பகுதியில் தேறிய உள்நாட்டு நிதியிடல் 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.571.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,067.0 பில்லியனாக விளங்கியது. மீளாய்விற்குரிய இக்காலப்பகுதியில் வெளிநாட்டு மூலங்களினூடான நிதியிடல் 2019இன் இதே காலப்பகுதியின் ரூ.112.7 பில்லியன் கொண்ட தேறிய கடன்பாடுகளுடன் ஒப்பிடுகையில் ரூ.194.5 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்தது.

6

- **2019 இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் உள்நாட்டு நிதியிடல் அதிகரித்தமைக்கு மத்திய வங்கியிலிருந்தான கணிசமானதொரு பகுதி உள்ளடங்கலாக வங்கித்தொழில் துறையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உயர்ந்த கடன்பாடுகளே காரணமாகும்.** இதன்படி, 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் தேறிய வங்கி நிதியிடல் 2019இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.170.9 பில்லியனிலிருந்து ரூ.867.0 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இது 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.165.4 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் ரூ.186.0 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல்களூடாக மத்திய வங்கியிலிருந்தான தேறிய நிதியிடலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, 2020இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளூடாக வர்த்தக வங்கிகளிலிருந்தான நிதியிடல் 2019இன் இதே காலப்பகுதிக்குரிய ரூ.341.1 பில்லியனிலிருந்து ரூ.436.6 பில்லியனுக்கு அதிகரித்தது. பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் உள்நாட்டு வங்கியல்லாத் துறையிலிருந்தான தேறிய நிதியிடல் 2019இன் இதே காலப்பகுதியின் ரூ.400.5 பில்லியனிலிருந்து ரூ.200.0 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து மொத்த உள்நாட்டு நிதியிடல் தேவைப்பாட்டில் 18.7 சதவீதத்திற்கு வகைகூறியது.

- **2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வெளியீடே உள்நாட்டுக் கடன்பாடுகளின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் இருந்தது.** 2020 யூலையுடன் முடிவடைந்த முதல் ஏழு மாத காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களிலிருந்தான தேறிய கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூ.149.9 பில்லியனிலிருந்து ரூ.276.9 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் திறைசேரி முறிகளிலிருந்தான தேறிய கடன்பாடுகள் 2019இன் இதே காலப்பகுதியின் ரூ.331.8 பில்லியனிலிருந்து ரூ.536.1 பில்லியனுக்கு அதிகரித்தது. 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் அரச வர்த்தக வங்கிகளுடனான மேலதிகப் பற்றுக்களூடான நிதியிடல் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூ.64.2 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் ரூ.296.7 பில்லியன் கொண்ட தேறிய கடன்பாட்டினைப் பதிவுசெய்தது. பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான கடன்பாடுகள் 2019 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியின் ரூ.47.2 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் ரூ.99.7 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்தது. கரிசனைக்குரிய இக்காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையினால் எதிர்நோக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மைத் தடைகள் இலங்கை அபிவிருத்தி முறிகளின் இத்தேறிய மீள்கொடுப்பனவிற்குப் பங்களித்தன.

அட்டவணை - 6.3

## வரவு செலவு திட்ட பற்றாக்குறைக்கான நிதியீட்டல் மூலங்கள்

ரூ. பில்லியன்

| விடயம் | 2018 | 2019 (அ) | 2019 சன - யூலை (அ) | 2020 சன - யூலை (அ) |
|---|---|---|---|---|
| **உள்நாட்டு நிதியிடல் (ஆ)** | **437.2** | **702.4** | **571.4** | **1,067.0** |
| வங்கி | 109.5 | 193.1 | 170.9 | 867.0 |
| வங்கியல்லா | 327.8 | 509.3 | 400.5 | 200.0 |
| **வெளிநாட்டு நிதியிடல்** | **323.5** | **314.1** | **112.7** | **-194.5** |
| கடன்கள் | 7.7 | -15.2 | -5.4 | -140.3 |
| வர்த்தகக் கடன்கள் | 456.9 | 377.9 | 136.2 | 29.2 |
| திறைசேரி முறிகளின் மீது வதிவற்றோரின் முதலீடுகள் | -126.4 | -59.3 | -18.3 | -63.4 |
| திறைசேரி உண்டியல்களின் மீது வதிவற்றோரின் முதலீடுகள் | -14.6 | 10.6 | 0.2 | -20.0 |
| **மொத்த நிதியிடல்** | **760.8** | **1,016.5** | **684.1** | **872.6** |

(அ) தற்காலிகமானது

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

- **2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் வெளிநாட்டு நிதியிடலானது தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்துடன் செயற்றிட்டக் கடன்களின் பெயரிலான மீள்கொடுப்பனவுகளையும் வதியாதோரினால் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் உடமைகளின் வீழ்ச்சி என்பவற்றை பிரதிபலித்திருந்தது.** மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கான தேறிய வெளிநாட்டு கடன்பாடுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.112.7 பில்லியன் கொண்ட தேறிய கடன்பாடுகளுடன் ஒப்பிடுகையில் ரூ.194.5 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்தன. தேறிய வெளிநாட்டு நிதியிடலானது ரூ.140.3 பில்லியன் கொண்ட வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்களையும் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட ரூ.83.3 பில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீட்டினையும் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.29.2 பில்லியன் கொண்ட தேறிய கடன்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

வரைபடம் 6.5
பற்றாக்குறை நிதியீட்டத்திற்கான மூலங்கள் (அ)




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) 2020 ஆம் ஆண்டிற்கான தரவுகள் மத்திய வங்கியின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

## அரச படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

### அரச படுகடன்

- **2019இன் இறுதியில் ரூ.13,031.5 பில்லியனாக விளங்கிய மத்திய அரச படுகடன் இருப்பு 2020 யூலை இறுதியில் ரூ.1,229.5 பில்லியனால் ரூ.14,261.5 பில்லியனுக்கு விரிவடைந்திருந்தது.** 2020 யூலை இறுதியில் உள்நாட்டுப் படுகடன் ரூ.7,708.0 பில்லியனுக்கு ரூ.1,078.9 பில்லியனால் அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப் படுகடன் 2019 உடன் ஒப்பிடுகையில் ரூ.150.6 பில்லியனால் ரூ.6,553.1 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் காரணமாக தேறிய நிதியிடலில் ஏற்பட்ட அதிகரிப்பு 2020 யூலை இறுதியில் மத்திய அரச படுகடனில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தது. அதேவேளை, 2020 யூலை இறுதியில் உள்ளவாறு வெளிநின்ற படுகடனின் ரூபாய்ப் பெறுமதி ரூ.281.2 பில்லியனால் அதிகரிப்பதற்கு நாணயமாற்று வீதத்தின் தேய்வும் பங்களித்திருந்தது.

- **மொத்த மத்திய அரச படுகடனில் குறுங்கால உள்நாட்டுப் படுகடனின் பங்கு அதிகரித்த வேளையில் 2020 யூலை இறுதியில் நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடனின் பங்கு 2019 இறுதியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்திருந்தது.** இதன்படி, மொத்த உள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடனின் பங்கு 2019 இறுதியின் 19.2 சதவீதத்திலிருந்து 2020 யூலை இறுதியில் 24.1 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2020 யூலை இறுதியில் உள்நாட்டுப் படுகடனில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2019 இறுதியின் 13.2 சதவீதத்திலிருந்து 14.9 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு வங்கித்தொழில் துறையினால் மவைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அதேவேளை, 2020 யூலை இறுதியில் மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் நீண்ட காலம் வரையிலான படுகடனிற்கான நடுத்தர காலத்தின் விகிதம் 2019 இறுதியின் 80.8 சதவீதத்திலிருந்து 75.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலில் மிகப் பெரும் பங்கினை உள்ளடக்கியிருக்கும் திறைசேரி முறிகளின் சதவீதம் 2019 இறுதியின் 69.5 சதவீதத்திலிருந்து 2020 யூலை இறுதியில் 66.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2020 யூலை இறுதியிலுள்ளவாறு மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் விகிதம் 2019 இறுதியில் காணப்பட்ட 8.5 சதவீதத்திலிருந்து 6.1 சதவீதத்திற்குக் குறைவடைந்து மீளாய்விற்குரிய காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் தேறிய மீள்கொடுப்பனவினைப் பிரதிபலித்தது.

- **2020 யூலை இறுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் 2019 இறுதியின் ரூ.728.2 பில்லியனிலிருந்து ரூ.705.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** இலங்கை அபிவிருத்தி முறிகளின் வெளிநின்ற நிலுவை ரூ.473.9 பில்லியனாகப் (ஐ.அ.டொலர் 2,552.3 மில்லியன்) பதிவுசெய்த வேளையில் 2020 யூலை இறுதியில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான வெளிநின்ற கடன்கள் ரூ.231.2 பில்லியனாக (ஐ.அ.டொலர் 1,245 மில்லியன்) விளங்கின. 2020 யூலை இறுதியில் மொத்த உள்நாட்டுப் படுகடனுக்கான வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனின் விகிதம் 2019 இறுதியின் 11.0 சதவீதத்திலிருந்து 9.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2020 யூலை இறுதியில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் ரூ.1,102.0 பில்லியனால் ரூ.7,002.9 பில்லியனுக்கு கணிசமாக அதிகரித்தது.

- **மத்திய அரச வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் சலுகையல்லாப் படுகடனின் பங்கானது 2019 இறுதியின் 56.8 சதவீதத்திலிருந்து 2020 யூலை இறுதியில் 55.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** பெயரளவு நியதிகளில், சலுகையல்லாப் படுகடனின்

6

### அட்டவணை 6.4
### வெளிநின்ற மத்திய அரச படுகடன்

ரூ. பில்லியன்

| விடயம் | 2018 | 2019 (அ) | 2019 யூலை இறுதி (அ) | 2020 யூலை இறுதி (அ) |
|---|---|---|---|---|
| உள்நாட்டு படுகடன் (ஆ) | **6,071.0** | **6,629.1** | **6,509.8** | **7,708.0** |
| முதிர்ச்சி காலப்பகுதியின்படி | | | | |
| குறுங்காலம் | 1,134.6 | 1,270.4 | 1,277.1 | 1,860.2 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 4,936.4 | 5,358.7 | 5,232.6 | 5,847.8 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கிகள் | 2,351.9 | 2,739.6 | 2,702.1 | 3,695.4 |
| வங்கியல்லாத்துறை | 3,719.1 | 3,889.5 | 3,807.7 | 4,012.5 |
| வெளிநாட்டுப்படுகடன் | **5,959.5** | **6,402.4** | **6,192.8** | **6,553.1** |
| சலுகைக் கடன்கள் (இ) | 2,705.8 | 2,767.5 | 2,620.3 | 2,911.6 |
| சலுகையல்லாக் கடன்கள் | 3,253.7 | 3,635.0 | 3,572.5 | 3,641.4 |
| மொத்த அரச படுகடன் | **12,030.5** | **13,031.5** | **12,702.6** | **14,261.0** |

*மூலங்கள்:* நிதிஅமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

(ஆ) ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைச்சேரி உண்டியல்கள் மற்றும் திறைச்சேரி முறிகள் மீதான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிநின்ற பெறுமதி விலக்கப்படுவதுடன் 2013 மார்ச் மாதத்தில் மூலதனமயப்படுத்துவதற்காக சிறிலங்கன் எயார்லைன்ஸ்க்கு வழங்கப்பட்ட ரூ.13,125 மில்லியன் (2018 யூன் மாதம் 01ஆம் திகதி முதிர்வடைந்தது) மற்றும் 2012 சனவரியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் (இவற்றுள் ரூ. 21,778 மில்லியன் பெறுமதியானது 2017 சனவரி 01இல் முதிர்ச்சியடைந்ததுடன் வெளிநின்ற பெறுமதியானது 2020 யூலை இறுதியில் ரூ.56,662 மில்லியனாக காணப்பட்டது) என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(இ) ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைச்சேரி உண்டியல்கள் மற்றும் திறைச்சேரி முறிகள் மீதான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிநின்ற பெறுமதிகளை உள்ளடக்குகின்றது.

வெளிநின்ற நிலுவை ரூ.3,641.4 பில்லியனுக்கு 0.2 சதவீதத்தினால் சிறிதளவிற்கு அதிகரித்தமைக்கு வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் வழங்கலே முக்கிய காரணமாகும். 2020 யூலை இறுதியில் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் சலுகை ரீதியான வெளிநாட்டுப் படுகடனின் பங்கு 2019 இறுதியின் 43.2 சதவீதத்திலிருந்து 44.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.



## படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

- **படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் ரூ.1,190.9 பில்லியனுக்கு 17.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** 2020 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.873.9 பில்லியனிலிருந்து ரூ.607.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் நாட்டிற்கான பன்னாட்டு முறியின் மீள்கொடுப்பனவு கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இல்லாமல் போனமையே முக்கிய காரணமாகும். 2020 யூலையுடன் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில்

### வரைபடம் 6.6
### அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகள் எதிர் அரசிறை (அ)




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) 2020 ஆம் ஆண்டிற்கான தரவுகள் மத்திய வங்கியின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

வட்டிக் கொடுப்பனவுகள் ஆய்விற்குரிய காலப்பகுதியில் படுகடன் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.561.6 பில்லியனிலிருந்து ரூ.583.6 பில்லியனுக்கு அதிகரித்தது. மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் முறையே ரூ.783.4 பில்லியனாகவும் ரூ.407.6 பில்லியனாகவும் விளங்கின.

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கத்தினை முக்கியமாகப் பிரதிபலிக்கின்ற விதத்தில் முக்கியஇறை நிலுவைகள் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் குறைந்த செயலாற்றத்தினையே கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** இருப்பினும், உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வியாபாரங்களுக்கும் வீட்டுத் துறையினருக்கும் வழங்கப்பட்ட முன்னொருபோதும் இல்லாத அளவிலான இறை மற்றும் நாணயக் கொள்கைத் தூண்டல்களின் ஆதரவுடன் பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படும் மீளெழுச்சியுடன் சேர்ந்து ஒட்டுமொத்த இறைச் செயலாற்றமும் 2021 மற்றும் அதற்கு அப்பாலும் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2020 நவெம்பர் நடுப்பகுதியில் அறிவிக்கப்படுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ள 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தின் இறை உபாயக் கொள்கை, வரிக் கொள்கைச்

சீர்திருத்தங்களினூடாக நடுத்தர கால இறைத் திரட்சிப் பாதையை வலுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் தேசிய கொள்கைக் கட்டமைப்பான 'சுபீட்சமும் ஒளியும் நிரம்பிய தொலைநோக்கு' என்பதில் விளக்கப்பட்டவாறு பொருளாதாரத்தினைத் தூண்டுவதற்காக மீண்டெழும் செலவினம் மேலும் சிக்கனப்படுத்தப்பட்டு அரச முதலீடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதேவேளை, அரசாங்கத்தின் முன்னுரிமைகளுக்கு இணங்க, இவற்றை ஒழுங்குபடுத்தும் பொருட்டு ஆயத்த நிலையிலுள்ள நிதியியல் செலவுத் திட்டங்களை மீளாய்வு செய்து படிமுறைகளை எடுத்திருந்த அதேவேளையில் அடையாளம் காணப்படுகின்ற செயற்றிட்டங்கள் வெளிநாட்டு முதலீடுகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இதன் ஊடாக அரசாங்கத்தின் எதிர்கால படுகடன் சுமையும் குறைக்கப்படும். அத்தகைய அபிவிருத்திகளுடன் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை நடைமுறைக் கணக்கு மற்றும் ஆரம்ப நிலுவைகளுடன் சேர்ந்து 2021இல் மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பற்றாக்குறை நிதியிடலில் காணப்படும் மிதமான தன்மை வெளிநிற்கும் மத்திய அரசாங்கத்தின் படுகடனின் மேம்பாட்டிற்கு இட்டுச்செல்லும். மேலும், பன்னாட்டுத் தரமிடல் முகவர்களினால் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டதன் காரணமாக மோசமான ஊகங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளுக்கிடையிலும் அரசாங்கம் எதிர்வரும் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளைச் சரியான முறையில் தீர்ப்பனவு செய்யுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது இறை நிலைத்து நிற்கும் தன்மையை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு வழிமுறைகளை எடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.